# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

## மானியக் கோரிக்கை எண். 23
## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016 – 2017


## செல்வி ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2016

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1 – 3 |
| II. | வரலாறு | 3 – 6 |
| III. | சேவைகள் குறித்த ஒரு பார்வை | 7 – 10 |
| IV. | நிறுவன மற்றும் நிருவாக அமைப்பு | 11 – 13 |
| V. | ஒருங்கிணைந்த செயல்பாட்டு அணுகுமுறை | 14 – 18 |
| VI. | மனிதவளம் | 19 – 20 |
| VII. | ஊர்திகள் மற்றும் கருவிகள் | 20 – 30 |
| VIII. | தகவல் தொடர்பு வசதிகள் | 31 – 35 |
| IX. | பயிற்சி வசதிகள் | 35 – 37 |
| X. | கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு | 38 – 39 |
| XI. | தீத்தடுப்பு முன் முயற்சிகள் | 40 – 52 |
| XII. | தீவிபத்து மற்றும் மீட்புப்பணி அழைப்புகள் | 52 – 54 |
| XIII. | நலத்திட்டங்கள் | 54 – 65 |
| XIV. | ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும் | 65 – 70 |
| XV. | விளையாட்டுப் போட்டிகள் | 71 |
| XVI. | முன் முயற்சிகள் | 72 – 93 |
| XVII. | நிறைவுரை | 94 – 95 |
| | அட்டவணைகள் I - III | 97 – 102 |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

## மானியக் கோரிக்கை எண். 23

## கொள்கை விளக்கக் குறிப்பு 2016 – 2017

### I. முன்னுரை

கற்கால உபகரணங்களுடன் கூடிய கட்டுப்படுத்தப்பட்ட தீயின் பயன்பாடானது, மனித பரிணாம வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க தொழில்நுட்பமாக பங்காற்றியுள்ளது. தீயின் உபயோகம் மனித வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. தீயின் முறையான பயன்பாடு மனித நாகரீக வளர்ச்சியில் பெரிய முன்னேற்றத்தினை ஏற்படுத்தியது. இன்றைய நவீன வீடுகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், விவசாயம் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் அனைத்திற்கும் தேவையான ஆற்றல், தீயின் பயன்பாட்டினையே நம்பியுள்ளது. இருப்பினும்,

கட்டுப்பாடற்ற தீயானது, உடைமைகளை அழித்து, உயிரினங்களை கொல்லவும், காயப்படுத்தவும் செய்வதால் அது மிகவும் ஆபத்தானது. நவீன யுகத்தில், பேரிடர் மேலாண்மைக்கு பெரும் சவாலாக விளங்கும் அதிவேகமான தொழில் மற்றும் நகர்ப்புற வளர்ச்சியில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பங்களிப்பு இன்றியமையாததாகிறது. இன்றைய நிலையில், தீயணைப்புப்படை வீரர்கள் தீயணைப்பு பணிகளன்றி பல்வேறு விதமான அவசரகாலப் பணிகளான வெள்ள நீரை வெளியேற்றுதல், வெள்ள காலங்களில் ஆழமான நீர்நிலைகளிலிருந்து உயிர்களை மீட்பது, சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டோரை காப்பாற்றுதல், உயரமான இடத்தில் சிக்கிக் கொண்டவர்களை காப்பாற்றுதல், உயரமான கோணங்களில் இருந்து காப்பாற்றுதல், அபாயகரமான வேதியியல் பொருட்களை கையாளுவதில் ஏற்படும் நிகழ்வுகள், கட்டிட இடிபாடுகளில் குறுகலான பகுதிகளில் சிக்குண்டவர்களை காப்பாற்றுதல் ஆகிய

பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். சமீபத்திய வெள்ளத்தின்போது, உயிர்களை காப்பாற்றுவதில், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினரால் அயராது மேற்கொள்ளப்பட்ட சீரிய மீட்புப் பணியானது மெச்சத் தகுந்த ஒன்றாகும். தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, நவீனமாகவும், ஒருங்கிணைந்து இருப்பதாலும் மற்றும் “காக்கும் பணி எங்கள் பணி” என்ற குறிக்கோளை பின்பற்றியும் தனக்கென ஒரு நன்மதிப்பை ஈட்டியுள்ளது.

## II. வரலாறு

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, நாட்டிலேயே மிகப்பெரிய மற்றும் மிகவும் திறன்பெற்ற நிறுவன அமைப்புகளில் ஒன்றாக தனக்கென ஒரு நற்பெயரை நிலைநாட்டியுள்ளது. தீ, வெள்ளம், நிலநடுக்கம் மற்றும் நிலச்சரிவு போன்ற பேரழிவுகளிலிருந்து உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றுவதே தீயணைப்பு வீரர்களின் கடமையாகும். தமிழ்நாடு தீயணைப்புப்

படையானது "மெட்ராஸ் தீயணைப்புப் படை" (Madras Fire Brigade) என்ற பெயரில் **1908–**ஆம் ஆண்டு சிறிய குழுவாக சென்னை மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வந்தது. பின்னர், இந்த தீயணைப்புப்படை பிரிவானது, படிப்படியாக வளர்ச்சியடைந்து **1945–**ஆம் ஆண்டில் **55** தீயணைப்பு நிலையங்களைக் கொண்டதாக விளங்கியது. வளர்ந்துவரும் இத்துறையின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, **1967–**ஆம் ஆண்டில் காவல்துறையில் இருந்து பிரிக்கப்பட்டு, தீயணைப்புத் துறை என உருவாக்கப்பட்டு, படிப்படியாக தீயணைப்பு மற்றும் மீட்பு என்ற இருவித பணிகளும் ஒப்படைக்கப்பட்டன. இத்துறை ஆற்றிவரும் பணிகளின் தன்மைக்கேற்ப புதிய அடையாளம் அளித்து, **2001–**ஆம் ஆண்டில், எனது அரசால், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பேராபத்து நிறைந்த இப்பணியின் தன்மையைக் கருத்திற்கொண்டு,

2000–ஆம் ஆண்டு வரையில் பெண்கள் தீயணைப்பு அலுவலர்களாக நியமனம் செய்ய பரிசீலிக்கப்படவில்லை. இருப்பினும், எனது அரசு 2001–ஆம் ஆண்டில், பாலின பாகுபாடுகளை களையும் விதமாக பெண்களை இத்துறையில் நியமனம் செய்ய முடிவு செய்து, இத்துறையில் பெண் அலுவலர்களை பணி நியமனம் செய்வதில் நாட்டிற்கே முன்னோடியாக விளங்குகிறது. தற்போது இத்துறையில் துணை இயக்குநர்கள் மற்றும் நிலைய அலுவலர்கள் பதவித் தரத்தில் 11 பெண் அலுவலர்கள் உள்ளனர். இத்துறையை நவீனப்படுத்தி தயார்படுத்தும் விதமாக பல்வேறு திட்டங்களையும் மற்றும் பணியாளர்களை உற்சாகப்படுத்தும் விதமாக முன் எப்போதுமில்லாத விதமான பல்வேறு நலத்திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர் நிலை, கடமைகள் மற்றும் பொறுப்புகள், நவீனப்படுத்துதல் போன்றவற்றை ஆய்வு செய்ய ஏதுவாக இந்தியாவிலேயே முதன் முறையாக 2002–ஆம் ஆண்டில் “தீயணைப்பு மற்றும் மீட்புப்

பணிகள் ஆணையம்" எனது அரசால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையத்தின் பல்வேறு பரிந்துரைகள், எனது அரசால் ஏற்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பேரிடரினை கையாளுதல், விழிப்புணர்வை உருவாக்குதல், தீப்பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவைகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை முக்கிய பங்கு வகிப்பதை கருத்தில் கொண்டு எனது அரசானது, 2011 முதல் 2016 வரையிலான காலத்தில், 17 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களை உருவாக்கியுள்ளது. தற்போது இத்துறையானது, ஒகேனக்கல் மற்றும் கோத்தகிரியில் உள்ள 2 மீட்புப்பணிகள் நிலையங்கள் அல்லாமல் 315 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களைக் கொண்டுள்ளது. ஒரு சிறிய நகருக்கான தீயணைப்பு பணிகளாக துவக்கப்பட்ட தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அனைத்து விதமான பேரழிவுகளையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்ட பன்முகத்திறன் வாய்ந்த மாநில அலகாக வளர்ச்சியடைந்துள்ளது.

## **III. சேவைகள் குறித்த ஒரு பார்வை**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை காப்பதில் முக்கிய பங்காற்றுவதுடன் அபாயகரமான சூழலில் இருந்து உயிர்களை மீட்பது போன்ற பணிகளிலும் தனது சேவையை அளித்து வருகிறது. மேலும் ‘‘காக்கும் பணி எங்கள் பணி’’ என்ற இத்துறையின் குறிக்கோளுக்கேற்ப, வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்ற இயற்கை இடர்பாடுகளில் பாதிக்கப்பட்டோர்களன்றி இதர பேரிடர்கள் மற்றும் எதிர்பாராது ஏற்படும் கட்டட இடிபாடுகள், வெடி விபத்துகள், இருப்புப்பாதை விபத்துகள், சாலை விபத்துகள் மற்றும் வாயு கசிவு போன்ற அபாயகரமான பொருட்களால் ஏற்படும் பேரழிவுகளில் பாதிக்கப்பட்டோரை உடனடியாக காப்பாற்றுதல் மற்றும் அவசர உதவி புரிதல் போன்ற சேவைகளை ஆற்றி வருகிறது. மேலும் தேர்தல்கள், கலவரங்கள், கேளிக்கைகள், விழாக்கள் ஆகிய காலங்களிலும்

மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதிலும் இத்துறை நிலைநிறுத்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. உரிமம் வழங்குவதை முறைப்படுத்தும் வகையில், உயர்மாடிக் கட்டடங்கள், தீ அபாயம் நிறைந்த தொழிற்சாலைகள், பொதுமக்கள் கூடுமிடங்கள் மற்றும் தீ அபாயம் உள்ள பிற குடியிருக்கைகள் ஆகியவற்றிற்கு உரிமங்கள் வழங்க அதிகாரம் படைத்த பல்வேறு துறை அலுவலர்களுக்கு, அவ்விடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீப்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கும் பணியை இத்துறை ஆற்றி வருகிறது. பொது மக்களுக்கான பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவை நடத்தப்படுமிடங்களில், சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தீத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்யும் வகையில், இத்துறையிலிருந்து ”தடையின்மைச் சான்று’’ பெற்ற பின்னரே அவை அனுமதிக்கப்படுகின்றன.

பொதுமக்களிடையே தீத்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதிலும், எழுச்சியடையச் செய்வதிலும், பேரிடர் காலங்களில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்தும், எத்தகைய அவசர காலங்களையும் எதிர்கொள்ள, சமுதாயத்தை ஆயத்த நிலைக்கு தயார் செய்வதிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பெரும்பங்கு ஆற்றி வருகிறது. இதற்கென, மக்களிடையே தீத்தடுப்பு குறித்து சிறந்த பாதுகாப்பு வழிமுறைகள் அவசரகால வெளியேற்ற பயிற்சி மற்றும் மீட்பு முறைகள் தொடர்பான விழிப்புணர்வு முகாம்கள், பிரச்சாரங்கள் ஆகியவற்றை மேற்கொள்ள இத்துறைக்கு 13 தீத்தடுப்பு குழுக்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. தீத்தடுப்புக் குழுக்களானது, கட்டடங்களில் பாதுகாப்பு தணிக்கை செய்து தீப்பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு வழிமுறைகள் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்வதுடன், அவற்றினை அவ்விடங்களில் குடியிருப்பவர்கள்

அறிந்து கொள்ளும் வகையில் செயலாற்றி வருகிறது. மேலும் இத்துறையானது, தீப்பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை குறும்படங்கள், தெருமுனை நாடகங்கள், பொம்மலாட்டங்கள், சாலை ஊர்வலங்கள் மற்றும் ஒத்திகைப் பயிற்சிகள் மூலம் ஏற்படுத்தி வருகின்றன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, தீபாவளி போன்ற விழாக்காலங்களில் ஏற்படும் தீவிபத்துகள், காயமடைதல் போன்றவற்றை தடுக்கும் வகையில், தீவிர பிரச்சாரங்களை, பிரபல நடிகர்களால் நடிக்கப் பெற்ற விளம்பர படங்களை மாநிலம் முழுவதுமுள்ள திரையரங்குகளில் திரையிடுதல் மற்றும் தொலைக்காட்சி ஊடகம் மூலமாக பரப்பி வருகின்றது. பட்டாசு தீ விபத்துக்களை வெகுவாக குறைப்பதை உறுதி செய்யும் வகையில் பிரசுரங்களை வெளியிட்டும் மற்றும் பொதுமக்கள் திரளாக கூடும் பிரதான இடங்களில் விளம்பரப் பலகைகளை நிறுவியும் வருகிறது.

## <u>IV. நிறுவன மற்றும் நிருவாக அமைப்பு</u>

இந்திய காவல் பணியைச் சார்ந்த கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலரான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநர் தமிழ்நாடு அரசு உள்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறார். தொழில்நுட்ப இனங்களில் துணை இயக்குநர் (தலைமையிடம்) மற்றும் நிருவாக இனங்களில் துணை இயக்குநர் (நிருவாகம்) ஆகியோர் இயக்குநருக்கு உதவி புரிகிறார்கள். இத்துறையின் செயல்பாடு நாளுக்கு நாள் வளர்ந்து வருவதினைக் கருத்திற்கொண்டும், தலைமையகத்தில், தொழில்நுட்ப அலுவலரின் தனித்தன்மையான முக்கியத்துவத்தை கருதியும் துணை இயக்குநர் (தலைமையிடம்) பதவியானது எனது அரசால் உருவாக்கப்பட்டது. இத்துறையானது சென்னை, வேலூர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு முறையே,

வடமண்டலம், வடமேற்கு மண்டலம், மத்திய மண்டலம், மேற்கு மண்டலம் மற்றும் தென்மண்டலம் என 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும் மண்டலங்கள் 34 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்பில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அடிப்படை அலகாகும். ஒவ்வொரு நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் தலைமையில், மாவட்ட அலுவலரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இத்துறையின் பணியாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் தீத்தடுப்பு குறித்த பயிற்சி

அளிக்கும்விதமாக இத்துறையில் மாநில பயிற்சி மையம் ஒன்று உள்ளது. இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப் பணி செயல்பாடுகள்) அவர்களின் தலைமையின் கீழ் தீயணைப்பு ஊர்திகளின் பழுதுகளை செப்பனிடுவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் ஒரு மாநிலப் பட்டறை செயல்பட்டு வருகிறது. பல்வேறு விபத்துக்களின்போது சிக்குண்டவர்களை கண்டறிய ஏதுவாக, பேரிடர் நிகழ்வுகளில் சிக்கி பாதிக்கப்பட்டுள்ளோரை கண்டறியும் பயிற்சி பெற்ற பல்வேறு இன ஆறு மோப்ப நாய்கள் மாநிலப் பயிற்சி மையத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. தீயணைப்புத் துறையில் மோப்பநாய் படை கொண்ட ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்புகள் குறித்த விவரங்கள் அட்டவணை–1 மற்றும் 2–ல் அளிக்கப்பட்டுள்ளன.

## V. ஒருங்கிணைந்த செயல்பாட்டு அணுகுமுறை

இத்துறையின் அடிப்படை அலகு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஆகும். பொதுவாக, ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் துவக்குவதற்கு பின்வரும் அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன:–

(i) **25** கி.மீ. சுற்றளவிற்குள் எந்த ஒரு நிலையமும் இருத்தல் கூடாது;

(ii) ஒவ்வொரு நிலையமும் குறைந்தது **50,000** மக்கள் தொகைக்கு சேவை செய்வதாக இருத்தல் வேண்டும்;

மற்றும்

(iii) ரூபாய் **50,000/–** அளவுக்கு பொருட்சேதம் ஏற்படக் கூடிய தீ விபத்திற்கான வாய்ப்புகள் உள்ள பகுதியாக இருத்தல் வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒரு நிலைய அலுவலர் தலைமையின் கீழ், இரண்டு

முன்னணி தீயணைப்போர்கள், ஒரு இயந்திர கம்மியர் ஓட்டுநர், இரண்டு தீயணைப்போர் ஓட்டுநர்கள் மற்றும் பதினோரு தீயணைப்போர்களுடன் செயல்பட்டு வருகிறது. ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஏற்படுத்துவதற்கு மொத்த செலவினமாக, சென்னை மாநகருக்கு தோராயமாக ரூபாய் **1.06** கோடியும், சென்னை அல்லாத இதர பகுதிகளுக்கு தோராயமாக ரூபாய் **1.03** கோடியும் கீழ்க்காணும் செலவினங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது:—

(i) ஒரு நீர்தாங்கி வண்டி மற்றும் அதற்குரிய இதர உபகரணங்கள் மற்றும் சிறப்பு உபகரணங்களுடன் வாங்குவதற்கான செலவினம் ரூபாய் **43** இலட்சம்.

(ii) சென்னை மாநகரிலுள்ள நிலையங்களுக்கு தொடர் செலவினம் ரூபாய் **56** இலட்சம் மற்றும் சென்னை அல்லாத பிற இடங்களில் உள்ள நிலையங்களுக்கு தொடர் செலவினம் ரூபாய் **54** இலட்சம்.

(iii) வாடகை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு தோராயமாக சென்னை மாநகரை பொருத்தவரையில் ஆண்டொன்றிற்கு ரூபாய் 7 இலட்சம் மற்றும் சென்னை அல்லாத பிற இடங்களில் ரூபாய் 6 இலட்சம்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் மாவட்ட வாரியான எண்ணிக்கை விவரம் அட்டவணை—3ல் அளிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் கண்காணிப்பு அறையும், தொலைபேசி இணைப்பு வசதியும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட தலைமையக நிலையங்களுக்கும் '101' என்ற கட்டணமில்லா தொலைபேசி வசதி செய்துதரப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் '101' மற்றும் '102' என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்கள் கொண்ட ஒரு தீ கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. மேலும், இக்கட்டுப்பாட்டு அறையுடன் சென்னை மாநகரம்,

திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி மூலம் இணைக்கப்பட்டுள்ளன. அவசர அழைப்புகள் தொலைபேசி மூலம் பெறப்பட்டவுடன் முன்னணித் தீயணைப்போரால் எச்சரிக்கை மணி ஒலியெழுப்பப்பட்டு நிலைய குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைவதற்காக **20** வினாடிகளில் தயாராகின்றனர். சென்னை மாவட்டத்தில், கட்டணமில்லா அழைப்பு மூலம் செய்தி பெறப்பட்டவுடன், அத்தகவலானது கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி மூலம் நிலையங்களுக்கு பரிமாற்றம் செய்யப்பட்டு, விபத்து அழைப்பின் தீவிர தன்மைக்கேற்ப அருகிலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு விபத்து இடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இத்துறையின், தகவல் தொடர்பு வசதியினை மேம்படுத்திடும் வகையில் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் கம்பியில்லா தகவல் தொடர்பு

சாதனங்களை கொள்முதல் செய்ய எனது அரசு அரசாணை (நிலை) எண்.115, உள் (காவல்–17) துறை, நாள்.8.2.2016–ல் ரூபாய் 90.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்துறையானது அனைத்து வகையான பேரழிவுகளையும் திறம்பட கையாளும் வகையில் தயார்படுத்தப்பட்டுள்ளது. பெருவெள்ளம், நிலச்சரிவுகள், கட்டட இடிபாடுகள் போன்றவற்றில் சிக்குண்டவர்களை மீட்பதற்கு ஏற்ற வகையில் அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கும் நீச்சல் மற்றும் சிறப்பு உபகரணங்களை இயக்குவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது பொதுமக்களை மீட்பதில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது மெச்சத்தக்க சீரிய பணியாற்றியுள்ளது.

## VI. மனித வளம்

இத்துறையானது, 7,058 களப் பணியாளர்கள் மற்றும் 347 அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. மாவட்ட அலுவலர், மாநிலப் பட்டறையின் உதவி பொறியாளர் (தானியங்கி), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து–தட்டச்சர் பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். தீயணைப்போர் பதவிகள், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்குழுமத்தால் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படுகின்றன.

பல்வேறு தரத்தில் களப் பணியாளர்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயக்குநர் | 1 |
| 2. | இணை இயக்குநர் | 3 |

| | | |
|---|---|---|
| 3. | துணை இயக்குநர் | 4 |
| 4. | மாவட்ட அலுவலர் | 35 |
| 5. | உதவி மாவட்ட அலுவலர் | 48 |
| 6. | உதவிப் பொறியாளர் (தானியங்கி) | 1 |
| 7. | நிலைய அலுவலர் | 355 |
| 8. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 171 |
| 9. | உதவி நிலைய அலுவலர் | 16 |
| 10. | முன்னணி தீயணைப்போர் | 817 |
| 11. | இயந்திர கம்மியர் ஓட்டுநர் | 130 |
| 12. | தீயணைப்போர் ஓட்டுநர் | 1126 |
| 13. | தீயணைப்போர் | 4351 |
| | மொத்தம் | 7058 |

## VII. ஊர்திகள் மற்றும் கருவிகள்

பேரிடர் காலங்களில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பங்கு இன்றியமையாததாகும். எனவே எவ்வகையான பேரழிவுகளையும் மிகுந்த செயல்திறமை மற்றும் தகுதியுடன் கையாளுவதற்கு எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இக்குறிக்கோளினை அடையும்விதமாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்

பணிகள் துறை அதன் பணிகளை திறம்பட மேற்கொள்ளும் வகையில் தற்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வாகனங்கள் மற்றும் கருவிகளை கொண்டுள்ளது:-

**<u>ஊர்திகள்:</u>**

| வ. எண் | ஊர்தியின் பெயர் | எண்ணிக்கையின் அளவு |
|---|---|---|
| 1. | நீர்தாங்கி வண்டிகள் | 349 |
| 2. | நோயாளர் ஊர்திகள் | 58 |
| 3. | சிறிய நுரை தகர்வு ஊர்திகள் | 13 |
| 4. | அவசர கால மீட்பு ஊர்திகள் | 19 |
| 5. | சுழல் மேஜை ஏணி ஊர்தி | 1 |
| 6. | திரவ ஆற்றலால் இயங்கும் மேடை கொண்ட சுழல் மேஜை ஏணி (வான் நோக்கி உயரும் ஏணி ஊர்திகள்) முறையே 37 மற்றும் 42 மீட்டர் உயரும் ஏணி கொண்ட ஊர்திகள் | 2 |
| 7. | வான் நோக்கி உயரும் 54 மீட்டர் நீளம் ஏணி கொண்ட ஊர்திகள் | 3 |
| 8. | தண்ணீர் லாரிகள் | 55 |
| 9. | மீட்பு இழுவை ஊர்தி | 1 |

| | | |
|---|---|---|
| 10. | நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள் | 2 |
| 11. | தண்ணீரை பனித் திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட கருவிகள் இருபுறமும் பொருத்தப்பட்ட விசை மிதிவண்டிகள் | 35 |
| 12. | தண்ணீரை பனித் திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட 600 லிட்டர் கொள்ளளவு நீர் தொட்டி கொண்ட சிறிய ரக நீர்தாங்கி வண்டிகள் | 5 |
| 13. | தண்ணீரை பனித் திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட 350 லிட்டர் கொள்ளளவு நீர் தொட்டி கொண்ட சிறிய ரக நீர்தாங்கி வண்டிகள் | 60 |
| 14. | நவீனரக நீர்தாங்கி வண்டிகள் | 19 |
| 15. | இழுவை ஊர்திகள் (Pickup vans) | 4 |

மேற்குறிப்பிட்டுள்ளவைகளுடன் அலுவலர்களும், பணியாளர்களும் விபத்து இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக ஜீப்புகள், சீருந்துகள், சிறிய பேருந்துகள், பெரிய பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் போன்ற சார்பு ஊர்திகளும் இத்துறைக்கு வழங்கப்பட்டு உள்ளன. எந்தவகையான அவசரகாலத்திலும், முதன்மை பொறுப்பாளர்களாக பணிபுரியும் உதவி மாவட்ட அலுவலர்களும், நிலைய அலுவலர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக அவர்களுக்கு ஊர்தி வசதிகளை படிப்படியாக வழங்க எனது அரசு முடிவெடுத்துள்ளது. அதன் முதற்கட்டமாக, 10 உதவி மாவட்ட அலுவலர்களுக்கு ஜீப்புகளையும், 50 நிலைய அலுவலர்களுக்கு விசை மிதிவண்டிகளையும் முறையே ரூபாய் 56 இலட்சம் மற்றும் ரூபாய் 30 இலட்சம் செலவினத்தில் வழங்க எனது அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

எனது அரசானது, இத்துறையின் ஆற்றல் மற்றும் செயல்திறமையினை மேம்படுத்தும்விதமாக அதன்

உள்கட்டமைப்பு வசதிகள், ஒருங்கிணைந்த தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி ஆகிய இனங்களில் தனி கவனம் செலுத்தி வருகிறது. பொதுமக்களுக்கு தீத்தடுப்பு குறித்து பயிற்றுவிக்கும் நோக்கில் 2015–2016–ஆம் ஆண்டுக்கான புத்தாக்கத் திட்டத்தின் கீழ் 5 கற்பிக்கும் ஊர்திகள் ரூபாய் 1.00 கோடி செலவில் வழங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்துறையின் செயல்பாட்டில் தீத்தடுப்பு முக்கிய பணியாகவும், நீர்தாங்கி வண்டிகள் உயிர்நாடியாகவும் விளங்குகின்றன. ஆகவே, இத்தகைய ஊர்திகள் அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கும் முதன்மை ஊர்தியாக வழங்கப்பட்டுள்ளன. 15 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள நீர்தாங்கி வண்டிகளுக்கு மாற்றாக புதிய ஊர்திகளை படிப்படியாக வழங்க எனது அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன்படி, 2014–2015, 2015–2016 ஆகிய ஆண்டுகளில், முறையே 30 நீர்தாங்கி வண்டிகளை ரூபாய் 7.60 கோடி செலவிலும்,

15 நீர்தாங்கி வண்டிகளை ரூபாய் 4.50 கோடி செலவிலும் வழங்க ஒப்பளிப்பு செய்துள்ளது. இதைப்போன்றே, இரசாயன மற்றும் தொழிற்சாலை தீ விபத்துகளை எதிர்கொள்வதில் மைய ஆதாரமாக விளங்கும் நுரை தகர்வு ஊர்திகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு எனது அரசு இத்தகைய ஊர்திகளை காலமுறையாக கொள்முதல் செய்து அனைத்து மாவட்ட தலைமையிடத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கும் மற்றும் முக்கிய நகரங்களுக்கும் படிப்படியாக வழங்கிட ஒப்பளிப்பு செய்துள்ளது. அதற்கேற்ப, 2014–2015–ஆம் ஆண்டில், சென்னை புறநகரில் மணலி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருபெரும்புதூர், கடலூர் மாவட்டத்தில் கடலூர், விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் ஆகிய முக்கிய நகர நிலையங்களுக்கு 5 சிறிய ரக நுரை தகர்வு ஊர்திகளை மொத்தம் ரூபாய் 1.42 கோடி செலவினத்தில் வழங்கிட எனது அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், 2015–2016–ஆம் ஆண்டில், தாம்பரம், சென்னை

மாவட்டத்தில் தண்டையார்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர் சிப்காட் மற்றும் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் ஆகிய நிலையங்களுக்கு 4 சிறிய ரக நுரை தகர்வு ஊர்திகளை ரூபாய் 1.52 கோடி செலவினத்தில் வழங்க எனது அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை புதிய சவால்களை எதிர்கொண்டு வருகிறது. முக்கியமாக, பெருநகரங்களில் நீண்டு உயர்ந்த கட்டடங்களின் விரிவாக்கத்தினை கருத்திற்கொண்டு எத்தகைய பெரும் ஆபத்துகளையும் சமாளிக்கும் விதத்தில் எனது அரசு இத்துறையை மாற்றியமைத்து நவீனப்படுத்தியுள்ளது. இத்துறைக்கு ஏற்கெனவே 54 மீட்டர் வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி ஒன்று ரூபாய் 5.97 கோடி செலவினத்தில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 39.74 கோடி செலவினத்தில் 104 மீட்டர் வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 2 ஊர்திகள் வாங்கப்பட்டுள்ளன. இவை விரைவில் பெறப்படும். இவ்வூர்திகள் முக்கியமாக

பலமாடிக் கட்டடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் செயல்திறனை மேம்படுத்துவதுடன் நாட்டிலேயே இத்தகைய உயரத்தை அடையக்கூடிய வான்நோக்கி உயரும் ஊர்திகள் கொண்ட முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழும்.

**<u>கருவிகள்:</u>**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஊர்திகள் தவிர, பெருவெள்ளம், நிலச் சரிவுகள், கட்டட இடிபாடுகள், தொழிற்சாலை விபத்துகள், சாலை மற்றும் இருப்புப்பாதை விபத்துகள் ஆகிய பேரிடர்களிலிருந்து மக்களின் உயிர்களைக் காக்கும் வகையில் பின்வரும் நவீன மற்றும் சிறப்பு கருவிகள் மற்றும் உபகரணங்களை இத்துறை கொண்டுள்ளது:-

| வ. எண் | கருவிகளின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கண்ணாடி இழைகளிலான விசைப் படகுகள் | 8 |
| 2. | உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் மேலங்கிகளுடன் கூடிய மிதவைப் படகுகள் | 69 |

| | | |
|---|---|---|
| 3. | அனல் வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி | 1 |
| 4. | பல்வகை நச்சு வாயுக்களை கண்டுபிடிக்கும் கருவிகள் | 2 |
| 5. | உயிரோடு உள்ளவரை கண்டறியும் கருவி | 3 |
| 6. | இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்கள் உள்ள இடத்தினை அடையாளம் காட்டும் கருவிகள் | 3 |
| 7. | நீட்டிச் சுருங்கும் ஆற்றல் கொண்ட அவசர கால விளக்குகள் | 73 |
| 8. | மின்னாக்கியுடன் கூடிய மின் ரம்பங்கள் | 79 |
| 9. | பெட்ரோலில் இயங்கும் 5 குதிரை சக்தித் திறன் கொண்ட எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய மின் ரம்பங்கள் | 41 |
| 10. | சிமெண்ட் கலவை கட்டமைப்புகளை உடைக்கும் கருவிகள் | 50 |
| 11. | புகை வெளியேற்றும் கருவிகள் | 17 |
| 12. | முன்னும் பின்னும் இயங்கக் கூடிய ரம்பங்கள் | 17 |

| | | |
|---|---|---|
| 13. | எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய வட்ட ரம்பங்கள் | 21 |
| 14. | எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய துளையிடும் மின் கருவிகள் | 21 |
| 15. | சுருங்கும் வடிவமைப்பு ஏணிகள் | 51 |
| 16. | தீ பாதிக்காத உடைகள் | 81 |
| 17. | ரசாயன பாதுகாப்பு உடைகள் | 111 |
| 18. | தீ பாதிக்காத கையுறைகள் | 222 ஜதை |
| 19. | பணியாளர் தற்காப்பு உடைகள் | 2155 ஜோடி |
| 20. | அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகள் | 111 |
| 21. | மிதவைப் பம்புகள் | 17 |
| 22. | கோம்பி கருவிகள் | 60 |
| 23. | மின்மோட்டாருடன் இணைந்த மின் ரம்பங்கள் | 37 |
| 24. | மின் கையுறைகள் | 64 ஜதை |
| 25. | அதிக திறன் கொண்ட கையடக்கத் தேடும் விளக்கு | 506 |
| 26. | முதல் உதவி பெட்டிகள் | 840 |
| 27. | ஆழ்குழாய் கிணறு மீட்பு உபகரணங்கள் | 5 |
| 28. | பாம்பு பிடிப்பான் | 139 |
| 29. | தேடும் கை விளக்குகள் | 250 |
| 30. | கயிறு ஏணிகள் | 64 |

எத்தகைய நெருக்கடியையும் கையாளும் விதத்தில் இத்துறையின் செயல்திறனை அதிகப்படுத்தும் விதமாக, எனது அரசு 2011 முதல் 2015–ஆம் ஆண்டு வரை பல்வேறு விதமான ஊர்திகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ரூபாய் 11.65 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

கையுறைகள், தலையையும் கழுத்தையும் மறைக்கும் தொப்பி, தீத்தடுப்பாற்றல் கொண்ட மூடுகாலணி மற்றும் தீப்பாதுகாப்பு தலைகவசம் உள்ளடக்கிய மூன்று அடுக்கு தீப்பாதுகாப்பு அங்கிகள் கொண்ட 1000 பணியாளர் தற்காப்பு உடைகள் வாங்க அரசாணை (நிலை) எண்.115, உள் (காவல்–17) துறை, நாள்.8.2.2016–ல் ரூபாய்.5.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## VIII. தகவல் தொடர்பு வசதிகள்

### தொலைபேசி மற்றும் வான்தந்தி வசதி

எந்தவித நெருக்கடிகளுக்கும் விரைந்து செயல்படும்விதமாக விரைவான தகவல் தொடர்புகளை எளிதாக்கும் பொருட்டு ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட தலைமையிட நிலையங்கள் மற்றும் பிற முக்கிய நிலையங்கள் அனைத்தும் 101 என்ற எண் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி மூலம் இணைக்கப்பட்டுள்ளது. ‘101’ மற்றும் ‘102’ என்ற எண்கள் கொண்ட, கட்டணமில்லா தொலைபேசி இணைப்புகளைக் கொண்டு நவீனமயமாக்கப்பட்ட தீக்கட்டுப்பாட்டறை சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. கட்டணமில்லா தொலைபேசி மூலம் பொதுமக்களிடமிருந்து அழைப்பு பெறப்பட்டவுடன், அதிகார எல்லைக்குட்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் எச்சரிக்கை செய்யப்பட்டு விபத்து இடத்திற்கு ஊர்தி அதன் குழுவினருடன் அனுப்பி

வைக்கப்படுகிறது. சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்கள் மற்றும் ஊர்திகள் கம்பியில்லா தந்தி தகவல் தொடர்பு வசதி மூலம் இணைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள கம்பியில்லா தந்தி தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக கம்பியில்லா மிக உயர் அலைவரிசை தகவல் தொடர்பு கருவிகள் வாங்க எனது அரசு 2014–2015–ஆம் ஆண்டில் ரூபாய் 32 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும் பணிகள் விரைந்து செயல்பட கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய நான்கு மண்டல தலைமையிடங்களுக்கு உணர்கொம்புகளுடன் கூடிய 30 மிகு உயர் அலை நிலைக்கருவிகள், 30 மிகு உயர் அலை உடன் எடுத்துச் செல்லும் கருவிகள் மற்றும் 30 மிகு உயர் அலை கையடக்க கருவிகள் அவற்றின் துணைக்கருவிகளுடன் வாங்க எனது அரசு ரூபாய் 90.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும் அலுவலர்களுக்கிடையே திறன்வாய்ந்த தகவல்

பரிமாற்ற முறையை உறுதிபடுத்தும் விதமாக நிலைய அலுவலர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கைப்பேசி இணைப்பில் பொது உபயோக குழு இணைப்பு வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்றுவதற்கும் மற்றும் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தவும் அலுவலர்களின் கைப்பேசி எண்கள் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**<u>பதில் செயல்பாடு நேரம்</u>**

பதில் செயல்பாடு நேரம் என்பது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்திறனை முடிவு செய்யும் காரணிகளில் ஒன்றாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிகழ்வுகளின்போது பதில் செயல்பாடு நேரத்தினை வெகுவாக குறைக்க இத்துறை தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. பதில் செயல்பாடு நேரமானது, சென்னை மாநகரில் சுமார் 6 நிமிடங்களாகவும், பிற இடங்களில் 10 நிமிடங்களுக்கு

குறைவாகவும் இருக்கும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலமும் மற்றும் திறன் வாய்ந்த தகவல் தொடர்பு சாதனங்களை அனைத்து மண்டலங்களுக்கும் வழங்குவதன் மூலமும் பதில் செயல்பாடு நேரத்தினை மேலும் வெகுவாக குறைக்க எனது அரசு முயற்சி எடுத்து வருகிறது.

**துறை வலைதளம் வசதி**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென "http://www.tnfrs.tn.nic.in" என்ற முகவரி கொண்ட வலைதளம் தேசிய தகவல் தொடர்பு மையத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வலைதளம், துறையைப் பற்றிய முழு தகவல்களையும் அதன் செயல்பாடுகள் குறித்த விவரங்களை அளிப்பதுடன், பொதுமக்களுக்கு தீப்பாதுகாப்பு குறித்து பயிற்றுவித்தல், தீ உரிம நிபந்தனைகள் குறித்த விவரங்கள் தெரிவித்தல் மற்றும் இந்திய தேசிய கட்டடங்கள் குறியீட்டு சட்டத்தின் கீழ்

(National Building Code of India) வழங்கப்பட்டுள்ள நிலையான விதிமுறைகளின்படி, பல்வேறு வசிப்பிடங்களில் பின்பற்றப்பட வேண்டிய தீப்பாதுகாப்பு குறித்த தகவல்களை அளிக்கும் முக்கிய பணியையும் செய்து வருகின்றது.

## IX. பயிற்சி வசதிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், பணியாளர்களை எப்போதும் நேர்த்தியாகவும் மற்றும் தீத்தடுப்பு பணிகளுக்கு பொருத்தமான நிலையிலும் வைத்திருக்க பயிற்சி முக்கிய அங்கம் வகிக்கிறது. அதற்கேற்ப, அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், தீயணைப்புப் பணிகளில் நவீன கால வளர்ச்சி மற்றும் யுக்திகளுக்கு ஏற்ப தங்களை ஈடுபடுத்திக்கொள்ள ஏதுவாகவும், தேவையான ஊர்திகள் மற்றும் உபகரணங்களுடன் பயிற்சி அளிக்க சென்னை தாம்பரத்தில், மாநிலப் பயிற்சி மையம் ஒன்று

செயல்பட்டு வருகிறது. குளிர்சாதனவசதி கொண்ட வகுப்பறைகள், ஒளி / ஒலி படக் கருவி, கணினிகள், வலைதள இணைப்பு, நூலகம் மற்றும் உணவகத்துடன் இணைந்த தங்கும் அறைகள் ஆகியன பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதாக உள்ளது. புதுதில்லியில் அமைந்துள்ள இந்திய அரசின் உள்துறை அமைச்சகமானது, நாகபுரி தேசிய தீயணைப்பு பயிற்சிக் கல்லூரியில் அளிக்கப்படும் பாடத்திட்டங்களை நடத்துவதற்காக, நாட்டிலுள்ள மண்டல பயிற்சி மையங்களுள் ஒன்றாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையத்தை அங்கீகரித்துள்ளது.

இந்த மாநிலப் பயிற்சி மையம் இதர மாநிலத்தைச் சார்ந்த தீயணைப்பாளர்களுக்கும், பொதுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் உரிய பயிற்சி அளித்து வருகிறது. அனைத்து தலைமையிடங்களிலும் தனிப்பட்ட

நபர்களுக்கு ஒரு வாரகாலத்திற்கு நபர் ஒருவருக்கு ரூபாய் 1,000/– என்ற கட்டண அடிப்படையில் அடிப்படை தீயணைப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தவகையில், 2015–ஆம் ஆண்டில் 943 தனிப்பட்ட நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பங்களிப்பானது விரிவடைந்து வருவதால் மாநிலப் பயிற்சி மையத்தை உலகத்தரம் வாய்ந்த தன்னாட்சி அதிகாரம் கொண்ட மாநிலப் பயிற்சி கழகமாக தரம் உயர்த்துவதற்கு ஏதுவாக, எனது அரசு, செங்கல்பட்டு வட்டம், காலவாக்கம் கிராமத்தில் 12.48 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் இந்நிலத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைப்பதற்கு அரசாணை (நிலை) எண்.167, உள் (காவல்–17) துறை, நாள்.12.2.2016–ன்படி ரூபாய் 60.00 இலட்சம் எனது அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## X. கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு

24 மணி நேரமும் செயல்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் இத்துறையின் உயிர்நாடியாகும் மற்றும் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கான கட்டடம் கட்ட தோராயமாக 45 சென்ட் நிலம் தேவைப்படுகிறது. 2300 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடம் கட்டுவதற்கான உத்தேச செலவு ரூபாய் 70 இலட்சமாக உள்ளது.

இத்துறையில், மொத்தமுள்ள 317 நிலையங்களில் (2 மீட்புப் பணி நிலையங்கள் உட்பட) 227 நிலையங்கள் அவற்றிற்குச் சொந்தமான கட்டடங்கள் அல்லது வாடகையில்லா அரசு கட்டடங்களிலும் மற்றும் 90 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கென சொந்தக் கட்டடம் கட்ட எனது அரசால் அரசாணை (நிலை) எண்.281, உள் (காவல்–17)

துறை, நாள்.**4.3.2016**–ல் ரூபாய் **64.18** லட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரகத்திற்கு தலைமையிட கட்டடம் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூபாய் **5.99** கோடி செலவில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் மூலம் கட்டப்பட்டு என்னால் துவக்கிவைக்கப்பட்டு **25.2.2016** முதல் செயல்பட்டு வருகிறது.

தியாகராய நகரில் செயல்பட்டு வரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட பாஷ்யம் சாலை மற்றும் ஜி.என்.செட்டி தெரு சந்திப்பில் **4553** சதுர அடி நிலத்தினை எனது அரசு விலையில்லாமல் ஒதுக்கீடு செய்துள்ளது.

## XI. தீத் தடுப்பு முன் முயற்சிகள்

### i) தீத் தடுப்பு

தீத்தடுப்பு, தீவிபத்தால் ஏற்படும் நெருக்கடிகளையும் மற்றும் அழிவுகளையும் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஆகும். தீத்தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தீத்தடுப்புக்கான முன்னெச்சரிக்கையை மேற்கொள்ளவும் மற்றும் அதன் கொடுமையிலிருந்து மீளவும் பொதுமக்களுக்கு கற்றுக்கொடுப்பதை நோக்கமாகக் கொண்டது. தீத்தடுப்பு பணியினை முனைப்புடன் செயல்படுத்த 13 மாவட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்களை இத்துறை கொண்டுள்ளது. மேலும் தீத்தடுப்புக் குழுக்கள் இல்லாத இடங்களில், தீத்தடுப்புப் பணியானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு தீ பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள், தீத்தடுப்பு ஒத்திகைகள், பொருட்காட்சி, மேடை

நாடகங்கள், குறும்படம் மூலம் பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், குடிசைப் பகுதிகள் மற்றும் பலமாடிக் கட்டடப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. **2015–**ஆம் ஆண்டில் தீத்தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் **7041** கல்வி நிறுவனங்களிலும் மற்றும் **7780** தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் சனவரி திங்கள் **21–**ஆம் நாள் “நாட்டிலுள்ள பள்ளிகளில், தேசிய அளவிலான தீ மற்றும் அவசரகால வெளியேறுதல் பயிற்சிகள் அளித்தல்” கடைபிடிப்பதன் ஒரு பகுதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு பள்ளியில் தீ விபத்து நேரிடும் அவசர காலங்களில் பாதுகாப்பாக வெளியேறுதல், தப்பித்துச் செல்லும் வழிகள் மற்றும் மீட்கும் வழிமுறைகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஒத்திகைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதே முறையில் ஏப்ரல் **14** முதல் ஏப்ரல் **20–**ஆம்

தேதி வரை நடைபெறும் தீத்தடுப்பு வாரத்தில் தீவிர பரப்புரைகள் மற்றும் பாதுகாப்பு பிரச்சாரங்களை இத்துறை நடத்தி வருகிறது.

நிலைய அலுவலரால் பள்ளி வளாகங்களில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் தீப்பாதுகாப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதை ஆய்வு மற்றும் தணிக்கை செய்த பின்னரே சம்பந்தப்பட்ட தீயணைப்பு நிலைய எல்லைக்குட்பட்ட நிலைய அலுவலரால் தடையின்மைச் சான்று வழங்கப்படுகிறது.

மேலும், இத்துறையானது, தீபாவளி பண்டிகையின்போது, பட்டாசுகளை கையாளுவது குறித்தும், வெடித்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் பொதுமக்களிடையே பயனுள்ள பிரச்சாரங்கள் மூலம் வலியுறுத்தி வருவதுடன் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய குழுவினருடன் கூடிய

ஊர்திகள் தீ அபாயமுள்ள இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக கடந்த 2015–ஆம் ஆண்டு தீபாவளியின்போது மாநிலம் முழுவதும் 84 தீ விபத்து அழைப்புகள் மட்டுமே பெறப்பட்டுள்ளன.

கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு அவர்களை பாதுகாத்துக் கொள்ளும் திறனை அதிகப்படுத்தும் விதமாக, கடலோரப் பகுதி அழிவுகள் தடுக்கும் திட்டத்தின் கீழ், கடலோர சமுதாய நோக்கம் கொண்ட பேரிடர் அபாயம் நீக்கும் திட்ட அமலாக்க நிறுவனமான ஊரகப் பகுதி மேம்பாட்டு மாநில நிறுவனத்துடன் இணைந்து (CBDRM), 167 கடலோர கிராமங்களில் தேடுதல் மற்றும் மீட்புக் குழுவினர்களுக்கு ஒத்திகைப் பயிற்சிகளும் மற்றும் பயிற்சி வகுப்புகளும் நடத்த இத்துறை உதவியது.

## ii) தீ பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள்

பொதுமக்கள் மற்றும் மாணவர்களை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்பாட்டில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுயஉதவிக் குழுக்களிலிருந்து தீப்பாதுகாப்பு தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு பல்வேறு ஆரம்ப நிலை தீத்தடுப்புத் திறன் மற்றும் மீட்பு வழிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இத்துறை தற்போது **7348** தன்னார்வத் தொண்டர்களை பெற்றுள்ளது. இத்தகைய பயிற்சி பெற்ற தன்னார்வத் தொண்டர்கள் அவசர காலங்களில் தீயணைப்பு பணியாளர்களுக்கு உதவிபுரிவதில் பெரும் ஆதாரமாக உள்ளனர்.

**iii) தீ அபாயமுள்ள இடங்களில் தீத்தடுப்பு முறைகள்**

இத்துறையின் மாவட்ட அலுவலரின் தலைமையில் பல்வேறு துறையினரை உள்ளடக்கிய குழு ஒன்று மாவட்டத்திலுள்ள அனைத்து திரையரங்குகளையும் ஆண்டிற்கு ஒருமுறை ஆய்வு செய்து அதன் அறிக்கையினை உரிமம் வழங்கும் அதிகாரம் உள்ள அலுவலர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கிறது. **2015**–ஆம் ஆண்டில் **391** திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அரசு கட்டடங்களிலும் இத்துறை தீப்பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்கிறது. **2015**–ஆம் ஆண்டில் **5824** அரசு கட்டடங்கள் தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, **9828** இதர கட்டடங்களிலும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் தீப்பாதுகாப்பு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மருத்துவமனைகளில் நடக்க முடியாதவர்கள், முதியோர்கள், குழந்தைகள் மற்றும் உடல் நலிவடைந்தவர்கள் உள்ளதாலும், அபாயகரமான அவசரகால வெளியேற்றும் நடைமுறைகள் சிக்கலானவை என்பதாலும், இங்கு தீப்பாதுகாப்பு மிகவும் முக்கியமானதாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது அனைத்து பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றில் தீ அபாயம் நிகழக்கூடிய பகுதிகளை கண்டறிதல் மற்றும் அங்கு தங்கியுள்ளவர்களுக்கு முறையான தீ மற்றும் உயிர் பாதுகாப்பு வழிமுறைகள் உள்ளனவா என்பதை உறுதி செய்து மதிப்பீடு செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது.

எந்தவொரு வசிப்பிடத்திலும் தீ மற்றும் உயிர் பாதுகாப்பிற்காக தேவைப்படும் கீழ்க்குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தீத்தடுப்பு நடவடிக்கைகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்:-

1. போதுமான தீயணைப்பான்கள் மற்றும் தீத்தடுப்பு அமைப்புகளான நீர்விடுகுழாய்கள், நீர்த்தும்பிகள், நீர்த்தெளிப்பான்கள் போன்ற அமைப்புகள் அமைத்தல்;
2. அவசரகாலங்களில் கையாள்வதற்கு ஏதுவாக மேற்கண்ட அமைப்புகளில் போதுமான நீர் நிரப்பம் செய்தல்;
3. உள்ளூரில் உள்ள தீயணைப்பு அலுவலரின் ஆலோசனையின்பேரில் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அவ்விடங்களில் தானியங்கி புகை அறியும் கருவி மற்றும் ஒலி எழுப்பும் அமைப்பு பொருத்துதல்;
4. தங்கி இருப்பவர்களின் அவசரகால வெளியேற்றத்திற்கு தேவையான

அகலமுடைய நடைக்கூடம் மற்றும் படிக்கட்டுகள் அமைத்தல்;

5. போதுமான புகை வெளியேற்றும் வசதிகள் மற்றும் புகை உட்புகா கதவுகள் அல்லது தீத்தடுப்பாற்றல் கொண்ட பிரிவுகள் அமைத்தல்;

6. பொய் மேற்கூரைகள் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அலங்கார வடிவமைப்புகள் தீ பாதிக்கப்படாத பொருட்களால் அமைத்தல்;

7. ஒளிரும் சைகைகள் மற்றும் தீயணைக்க பின்பற்ற வேண்டிய அறிவிப்பு அமைப்புகள் அமைத்தல்;

8. அத்தகைய வளாகங்களில் வசிப்பவருக்கு அவசரகாலங்களில் உதவி புரிவதற்காகவும் மற்றும்

மேற்கண்ட தீத்தடுப்பு அமைப்புகளை நல்லமுறையில் பராமரிக்கவும் பயிற்சி பெற்ற தீயணைப்பு பணியாளர்களை அமர்த்துதல்.

**iv) கோடைக் காலம் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது ரோந்துப் பணியில் ஈடுபடுதல்**

கோடைக்காலத்தில், உயர்ந்த வெப்பநிலை, வெளிப்புற சூடு மற்றும் அனல் காற்று போன்றவற்றால் குடிசைப் பகுதிகளில் தீவிபத்துகள் அதிக அளவில் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் ஏப்ரல், மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் குடிசை பகுதிகளில் ஏற்படும் தீவிபத்துகளை காலவிரயமின்றி எதிர்கொள்வதற்காகவும் மற்றும் செயல்படும் நேரத்தை குறைப்பதற்காகவும், தீ அபாயம் நிறைந்த பகுதிகளில் ரோந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் ஏற்பட்ட தீ விபத்துகளின்

அடிப்படையில் இந்த ரோந்துப்பணிகளின் இடங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. தீபாவளி பண்டிகையின் போதும், மாநிலம் முழுவதும் தீவிபத்து ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் இத்துறையைச் சார்ந்த ஊர்திகள் மற்றும் பணியாளர்கள் நிலைநிறுத்தப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

**<u>v) தீயணைப்புத் தொண்டு நாள்</u>**

ஆண்டு தோறும், ஏப்ரல் திங்கள் **14–**ஆம் நாள் தீயணைப்புத் தொண்டு நாளாக அனுசரிக்கப்படுகிறது. ஏப்ரல் திங்கள் **14–**ஆம் நாள் தொடங்கி ஒரு வார காலத்திற்கு தீயணைப்புத் தொண்டு நாள் நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. **1944–**ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **14–**ஆம் நாள் மும்பை துறைமுகத்தில் விக்டோரியா கப்பல் தளத்தில் ஏற்பட்ட கொடூர தீ விபத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட வெடித்து

சிதறுதல்களால் உயிர் இழந்த தீயணைப்பு வீரர்களை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப்படுகிறது. தீயணைப்புத் தொண்டு வாரத்தில் அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காக தீப்பாதுகாப்பு குறித்த பரப்புரைகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் மற்றும் வினாடி வினா நிகழ்ச்சிகளை இத்துறை ஏற்பாடு செய்கிறது. மாநிலம் முழுவதும் மாணாக்கர்களுக்கு ஓவியப்போட்டி, கட்டுரைப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மேலும் இத்துறையானது, தன்னார்வத் தொண்டர்கள், சுய உதவி குழுக்கள் மற்றும் பெரிய அபாயகரமான தொழிற்சாலைகள் ஆகியவற்றின் உதவியுடன் இணைந்து பாதுகாப்பு குறித்த பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் ஒத்திகை பயிற்சிகள் நடத்தி வருகின்றன. தீத்தடுப்பு குறித்த பரப்புரைகளை செய்தித் தாள்கள், தொலைக் காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் வாயிலாக

பிரச்சாரங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு பரப்புரை செய்ய நாடு முழுவதும் பின்பற்றப்படும் சொற்றொடர் பின்வருமாறு:-

“தீ விபத்தினை தடுப்போம்:

தேசத்தின் வளர்ச்சிக்கு உதவுவோம்”

## XII. தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகள்

**2015**–ஆம் ஆண்டில் இத்துறை **19,866** தீ விபத்து அழைப்புகளில் பணியாற்றி, **52** மனித உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. **241.08** கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளது. மேலும், **20,625** மீட்பு அழைப்புகளை சீரிய முறையில் மேற்கொண்டு **44,327** உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. அண்மையில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட

வெள்ளத்தின் போது, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது ஊர்திகள், பணியாளர்கள் மற்றும் படகுகள் ஆகியவற்றை பயன்படுத்தி, சீரிய முறையில் பணியாற்றி மனித உயிர்களை காப்பாற்றியுள்ளது. வெள்ளம் சூழ்ந்ததில் பாதிக்கப்பட்டோரை மீட்டெடுத்த இப்பணிகள் தவிர, தொலைபேசி இணைப்பகங்கள், துணை மின் நிலையங்கள், பள்ளிகள், சுரங்கப்பாதைகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்த வெள்ளத்தினை நீரிறைப்புப் பணிகள் மூலம் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு அத்தியவாசிய தேவைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வந்ததில் இத்துறை மிகமுக்கிய பங்காற்றி உள்ளது. மேலும் மகிழுந்துகள், மின்தூக்கிகள் மற்றும் திறக்க முடியாத கதவுகளின் பின்புறம் சிக்கிக்கொண்ட மக்களையும் இத்துறை காப்பாற்றியுள்ளது. நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றுதல், மின்கசிவால் ஏற்பட்ட தீவிபத்து

அழைப்புகளை எதிர்கொள்ளுதல், நோயாளிகளை படகு மூலம் எடுத்துச் செல்லுதல் மற்றும் வெள்ளத்தால் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் பொது மருந்துகள் வினியோகித்தல் ஆகிய பணிகளையும் இத்துறை மேற்கொண்டது. மேலும், இத்துறை வெள்ள நீரில் தத்தளித்த அதிக விலங்குகளையும் காப்பாற்றியுள்ளது.

## XIII. நலத் திட்டங்கள்

### i) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேமநல நிதி

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேம நல நிதியானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் துயரக் காலங்களில் நிதி உதவி அளிக்கவும் மற்றும் அவர்களது நலனை மேம்படுத்துவதற்காகவும் 1962–ஆம் ஆண்டில், ஏற்படுத்தப்பட்டது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக இந்த நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது:-

(அ) காசநோய், தொழுநோய் மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் ஊட்டச்சத்துள்ள உணவு வழங்குவதற்கு;

(ஆ) தீயணைப்புப் பணியாளர்களின் குழந்தைகளின் உயர் கல்விச் செலவிற்கு;

(இ) உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க; மற்றும்

(ஈ) உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் உயிரிழந்துவிட்டால், அவர்களது இறுதி சடங்கு செலவிற்கு;

இத்திட்டத்தில், தற்போது **5,209** பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும்

**2015–2016–**ஆம் ஆண்டில் **50.51** இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

| **வ. எண்** | **உதவித் தொகை விவரம்** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1.** | உறுப்பினர்களுடைய **217** குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக | **15.23** |
| **2.** | பணியாளர்களின் குழந்தைகளில் **10–**வது மற்றும் **12–**வது வகுப்புகளில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்குதல் மற்றும் **85** சதவிகிதமும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசு. இந்த பரிசுத் தொகை உறுப்பினர்களுடைய **194** குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | **5.09** |
| **3.** | **205** பணியாளர்கள் ஓய்வு பெற்ற போது, அடையாள கருணைத் தொகையாக அளிக்கப்பட்ட நிதி உதவி | **11.23** |

| | | |
|---|---|---|
| **4.** | உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவித் தொகை | **18.96** |
| | **மொத்தம்** | **50.51** |

இந்நல நிதிக்கு மானியமாக 2014 வரையில், ஒவ்வொராண்டும் அரசு 12 இலட்சம் ரூபாய் வழங்கி வந்தது. பணியாளர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியின் தேவை நாளுக்கு நாள் கூடிவருவதை கருத்திற்கொண்டு, எனது அரசானது, சேமநல நிதிக்கு வழங்கி வரும் மானியத்தை ரூபாய் 12 இலட்சத்தில் இருந்து ரூபாய் 20 இலட்சமாக அரசாணை (நிலை) எண்.222, உள் (காவல்–17) துறை, நாள்.18.2.2016–ன்படி உயர்த்தி வழங்கியுள்ளது.

**ii) கருணைத்தொகை**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள், பணியில் ஈடுபடும்போது எதிர்பாரா விபத்து ஏற்பட்டு பாதிப்படையும்போது, கருணைத்

தொகை வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நிதி உதவிகளின் விவரம் பின்வருமாறு:-

| **வ. எண்** | **உதவித் தொகை விவரம்** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| (i) | பணியாற்றும் போது உயிரிழப்பவர்களுக்கு | 5,00,000/– |
| (ii) | பணியாற்றும் போது நிரந்தர ஊனம் அடைபவர்களுக்கு | 1,00,000/– |
| (iii) | பணியாற்றும் போது கடுமையாக காயம் அடைபவர்களுக்கு | 20,000/– |
| (iv) | பணியாற்றும் போது சிறு காயம் அடைபவர்களுக்கு | 10,000/– |

**iii) குழு காப்பீட்டுத் திட்டம்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு உதவுவதற்கான அனைத்து தரத்திலுள்ள தீயணைப்பு பணியாளர்களை உள்ளடக்கிய குழு காப்பீட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், உதவி மாவட்ட அலுவலர் பதவி தரம் வரையில் அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கு

வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையானது 2012–2013–ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தின்படி மாவட்ட அலுவலர், துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இந்த நிவாரணத் தொகை 2013–2014–ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

## iv) உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ், நியாய விலை கடைகள் மூலமாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் தீயணைப்போர் முதல் உதவி மாவட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு, விலையில்லா அரிசியும் மற்றும் கோதுமை, சர்க்கரை, மைதா மற்றும்

பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் 50 சதவீத மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி ஆண்டொன்றுக்கு 63 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.

**v) பணியாளர்களுக்கான உணவுப் படி**

நிலைய அலுவலர் பதவிக்கு கீழ் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு, தீ விபத்து, மீட்புப் பணி அழைப்பு மற்றும் அவசரக் காலங்களில் படை திரட்டும் பணியில் ஈடுபடும் போது (mobilization) உணவுப்படி சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றிற்கு ரூபாய் 200/– ஆகவும், பிற பகுதிகளில் நாள் ஒன்றிற்கு ரூபாய் 150/– ஆகவும், வழங்கப்பட்டு வந்தது. 2014–2015–ஆம் ஆண்டில், எனது அரசு, நிலைய அலுவலர்கள் (16 உதவி நிலைய அலுவலர்கள் உட்பட) நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) மற்றும் உதவி மாவட்ட அலுவலர்கள் ஆகியோருக்கும்,

தீ விபத்து, மீட்புப் பணி அழைப்பு மற்றும் அவசரக் காலங்களில் படை திரட்டும் பணியில் ஈடுபடும் போது (mobilization) உணவுப்படி வழங்கவும், அதனை, சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றிற்கு ரூபாய் **200/–** ஆகவும், பிற பகுதிகளில் நாள் ஒன்றிற்கு ரூபாய் **150/–** ஆகவும் ஆண்டொன்றிற்கு **43** இலட்சம் ரூபாய் தொடர் செலவினத்தில் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**<u>vi) மானிய விலையில் பொருட்கள் வாங்க சிறப்பு அங்காடிகள்</u>**

பணிபுரியும், ஓய்வுபெற்ற மற்றும் உயிரிழந்த காவல்துறை பணியாளர்கள் குடும்பங்களுக்கு சிறப்பு அங்காடிகள் மூலம் உணவு பொருட்கள் வழங்கும் திட்டத்தினை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கும் **2012–2013–**ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வங்காடிகளின் மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு மதிப்பு கூட்டு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், அவை சந்தை

விலையை விட மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

**vii) "உங்கள் சொந்த இல்லம்" திட்டம்**

மேலக்கோட்டையூர் கிராமத்தில் **2,673** வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, **25.2.2016** அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது. இதில், **113** வீடுகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், எனது அரசு தகுதியான நபர்களுக்கு வீடுகட்ட முன்பணமாக ரூபாய் **2.71** கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**viii) குடியிருப்புகள் கட்டுதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள், **24** மணி நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதால் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்தவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாக பணிக்கு அழைக்கவும் அவர்களது

நிலையங்களுக்கு அருகில் குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாதது ஆகும். எனது அரசு, 2014–2015–ஆம் ஆண்டில், அரக்கோணத்தில் 1 நிலைய அலுவலர் மற்றும் 16 பணியாளர் குடியிருப்புகளை ரூபாய் 2.13 கோடி செலவில் கட்ட ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், சென்னையில், வண்ணையம்பதியில் 3 நிலைய அலுவலர் குடியிருப்புகளும், தங்கசாலையில் 6 பணியாளர் குடியிருப்புகளையும் ரூபாய் 1.79 கோடி செலவில் கட்டவும் ஒப்பளிப்பு செய்துள்ளது. எனது அரசு முதன் முறையாக, சென்னையில் உள்ள மாவட்ட அலுவலர் மற்றும் அதற்கு மேல் உள்ள அலுவலர்களுக்கான குடியிருப்புகள் இரண்டுடன், தலைமையிடத்திற்கு வந்து செல்லும் அலுவலர்களது பயன் பாட்டிற்கென விருந்தினர் விடுதி ஒன்றும் கட்ட ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்துறையைச் சேர்ந்த களப்பணியாளர்கள் அனைவரும், பணி விதிகளின்படி வாடகையில்லா குடியிருப்புகள் பெற, தகுதி உடையவராவார்கள். தற்போது, மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் 1,256 குடியிருப்புகள் உள்ளன.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தினரால் 55 குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது.

2015–2016–ஆம் ஆண்டில், எனது அரசு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் 50 பணியாளர்கள் (திருமணமாகாதவர்கள்) தங்குவதற்கு சென்னை தங்கசாலையில் ஒரு படை குடியிருப்பு கட்ட அரசாணை (நிலை) எண்.167, உள் (காவல்–17) துறை, நாள்.12.2.2016–ல் ரூபாய் 1.13 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய பணியாளர்களுக்கு 2 நிலைய அலுவலர் குடியிருப்புகள் மற்றும் 15 தீயணைப்போர் குடியிருப்புகள் கட்ட அரசாணை (நிலை) எண்.280, உள் (காவல்–17) துறை, நாள்.4.3.2016–ல் எனது அரசு ரூபாய் 2.22 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## ix) முழுஉடற் பரிசோதனை திட்டம்

அபாயகரமான நோய்கள் மற்றும் மனஅயர்ச்சியினை ஏற்படுத்தும் சவால் நிறைந்த சூழ்நிலைகளில் தீயணைப்பு பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இவ்வாறு பாதிக்கப்படும் இத்துறையின் பணியாளர்களின் துயரினை நிவர்த்தி செய்யும் விதமாக காவல்துறை பணியாளர்களுக்கு உள்ளவாறே 40 வயது முடிவுற்ற அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் கட்டணமின்றி முழு உடல்பரிசோதனை மேற்கொள்ள எனது அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

## XIV. ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும்

தங்களது உயிரைப் பணயம் வைத்து பணியாற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக கீழ்க்குறிப்பிட்டுள்ள பதக்கங்கள் மற்றும் விருதுகள் அரசால் வழங்கப்படுகின்றன:–

## i. <u>தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)</u>

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்) ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று வழங்கப்படுகிறது.

இப்பதக்கம் பெறுபவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப பரிசுத் தொகையாக ரூபாய் 4,000/– முதல் ரூபாய் 10,000/–வரை பெறத் தகுதியுடையவராவார்கள். 2015–ஆம் ஆண்டில், பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்கள் 10 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சரின் வீர தீரச் செயலுக்கான பதக்கங்கள் (அண்ணா பதக்கம்) பெறுபவர்கள் மாதாந்திர பணப்பயனாக ரூபாய் 500/– பெற்று வந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சரின் வீர

தீரச் செயலுக்கான பதக்கங்கள் (அண்ணா பதக்கம்) பெறுபவர்கள் மாதம் ரூபாய் **500/–** என்பதற்கு பதிலாக ஒட்டுமொத்த வெகுமதி தொகையாக ரூபாய் **5** லட்சம் வழங்கிட எனது அரசு **2014–**ல் ஆணையிட்டுள்ளது.

## ii. <u>தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம்</u>

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கமானது, தண்டனைகள் ஏதுமின்றி **10** ஆண்டு காலத்திற்கும் மேலாக தூய்மையாகப் பணிபுரிந்த பணியாளர்களுக்கு (நிலைய அலுவலர் பதவிக்கு கீழுள்ள பணியாளர்களுக்கு) ஒவ்வொராண்டும் பொங்கல் திருநாளன்று வழங்கப்படுகிறது. **2016–**ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, இப்பதக்கமானது முன்னணித் தீயணைப்போர் / இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் ஆகிய பதவிகளில் பணியாற்றும் **120** தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி பணியாளர்களுக்கு

வழங்கப்பட்டுள்ளது. இப்பதக்கம் பெறும் அனைவரும் மாதாந்திர பணப்பயனாக ரூபாய் 200/– பெறுவர்.

### iii. சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பணிப் பதக்கம்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிய பணியாளர்களின் திறமையினை போற்றும் வகையில் வழங்கப்படும் இந்த பதக்கமானது எனது அரசால் 2001–ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் தீத்தொண்டு நாளான ஏப்ரல் 14–ஆம் நாளன்று நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்போர் ஆகியோருக்கு தலா ஒரு பதக்கம் வீதம் மூன்று பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இப்பதக்கம் பெறுபவர்களுக்கு 8 கிராம் எடையுள்ள தங்க பதக்கம் மற்றும் ஒட்டு மொத்த பரிசுத் தொகை ரூபாய் 2,000/– முதல் ரூபாய் 3,000/– வரை வழங்கப்படுகிறது. தீ விபத்து மற்றும்

மீட்புப் பணிகளில் தங்களது உயிரை பணயம் வைத்து துணிச்சலுடனும் மற்றும் வீரத்துடனும் பணிபுரியும் பணியாளர்களை அதிக அளவில் அங்கீகரித்து ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கையினை **3–**லிருந்து **6–**ஆக எனது அரசு உயர்த்தியுள்ளது.

**iv) <u>அண்ணா வீர தீர பதக்கம்</u>**

அண்ணா வீர தீர பதக்கமானது, வீர தீரச் செயல் புரிந்த பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது. இப்பதக்கமானது, ஆண்டு தோறும் குடியரசு தினத்தன்று வழங்கப்படுகிறது. இந்த விருதானது ரூபாய் **5,000/–** மதிப்புள்ள தங்கப் பதக்கம் மற்றும் அதனுடன் சான்றிதழும் அண்ணா வீர தீர பதக்கம் பெறும் ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் மொத்த பரிசுத் தொகை ரூபாய் **1,00,000/–** கொண்டதாகும். இப்பதக்கம் **2015–**ஆம் ஆண்டில்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சார்ந்த 3 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, (i) சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் மெச்சத்தக்க / பாராட்டத்தக்க பணிக்கான குடியரசு தலைவரின் தீயணைப்புப் பணி பதக்கம் (ii) சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் வீர தீரச் செயல்களுக்கான குடியரசு தலைவரின் தீயணைப்புப் பணி பதக்கம் ஆகியன மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன. 2015–ஆம் ஆண்டிற்கான சுதந்திரத் தினத்தன்று வழங்கப்படும் குடியரசு தலைவரின் பாராட்டத்தக்க பணிக்கான பதக்கம், ஒரு இணை இயக்குநர் மற்றும் 3 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2016–ஆம் ஆண்டிற்கான குடியரசு தினத்தன்று வழங்கப்படும் குடியரசு தலைவரின் பாராட்டத்தக்க பணிக்கான பதக்கம் ஒரு நிலைய அலுவலர் மற்றும் 3 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## XV. விளையாட்டுப் போட்டிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை சவாலாகக் கொண்டு ஈடுபடும் தீயணைப்பு வீரர்களின் உடற்தகுதியினை மேம்படுத்தவும் மற்றும் மனதை ஊக்கப்படுத்தவும், குழுவினரிடையே ஒற்றுமை, உற்சாகம், ஒழுக்கமான நடத்தை, நேர்மை ஆகியவற்றினை வளர்க்கவும் விளையாட்டுப் போட்டிகள் அவசியம் என்பதினை எனது அரசு கருத்தில் கொண்டு, மண்டல விளையாட்டுப் போட்டிகளுக்கான மானியத் தொகையினை **8,000/–** ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாகவும் மற்றும் மாநில விளையாட்டுப் போட்டிகளுக்கான மானியத் தொகையினை **30,000/–** ரூபாயிலிருந்து மூன்று லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி அரசு ஆணை **(நிலை)** எண்.**19,** உள் துறை, நாள் **6.1.2015–**ல் ஒப்பளிப்பு செய்துள்ளது. மாநில விளையாட்டுப் போட்டிகள் **2015–**ஆம் ஆண்டு திருச்சியிலும் மற்றும் **2016–**ஆம் ஆண்டு கோயம்புத்தூரிலும் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

## XVI. முன் முயற்சிகள்

பொது மக்களுக்கு ஆற்றி வரும் சேவையின் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தை கருத்திற்கொண்டும் மற்றும் துறையில் உள்ள பணியாளர்களின் நலனைக் கருதியும் எனது அரசு கடந்த **5** ஆண்டுகளில் பின்வரும் முக்கிய முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:-

- **2.36** கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் சின்ன சேலம், மதுரை மாவட்டத்தில் டி.கல்லுப்பட்டி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

- **42.08** இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம்–சிவகங்கை கோட்டத்தை இரண்டாகப் பிரித்து சிவகங்கையைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய கோட்டம் உருவாக்கப்பட்டது.

- **55.89** இலட்சம் ரூபாய் செலவில் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டியை தலைமையிடமாக கொண்டு புதிய கோட்டம் உருவாக்கப்பட்டது.
- சென்னை மாநகரப் பயன்பாட்டிற்காக **54** மீட்டர் உயரம் செல்லக்கூடிய வானோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி ஒன்றும் மற்றும் **104** மீட்டர் உயரம் செல்லக்கூடிய வானோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்திகள் இரண்டும் ஆக **3** ஊர்திகள் **45.70** கோடி ரூபாய் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு வான் நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தியினை இயக்குவதற்குரிய பணியிடம் ஏற்படுத்தவும் **39.08** இலட்சம் ரூபாய் தொடர் செலவினம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- மாநகரங்களின் உபயோகத்திற்கு **9** மேம்படுத்தப்பட்ட நவீனரக நீர்தாங்கி வண்டிகள், உயர் அழுத்த நீர் இறைப்பி பொருத்தப்பட்ட விரைந்து செல்லும் திறன் கொண்ட **8** சிறியரக நீர்தாங்கி வண்டிகள்,

வெட்டும் விரிக்கும் திறன்கள் ஒருங்கிணைந்த 22 கோம்பி கருவிகள் ஆகியன 3.20 கோடி ரூபாய் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- அம்பத்தூர், திருச்சி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் உபயோகத்திற்கு 96 இலட்சம் ரூபாய் செலவில் 4 சிறிய நுரை தகர்வு ஊர்திகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- துறையின் பயன்பாட்டிற்காக 14 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 2 இரு சக்கர வாகனங்கள் 71 இலட்சம் ரூபாய் செலவில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 38 கணினிகள், அச்சுக் கருவிகள் மற்றும் 6 நகலெடுப்பான்கள் 22 இலட்சம் ரூபாய் செலவில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிலையங்கள் மற்றும் அலுவலகங்களுக்கான

கட்டடங்கள், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் கட்டுமானம் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- தீயணைப்போர் பதவியில் ஆண்டுதோறும் ஏற்படும் காலியிட மதிப்பீட்டினை துறைத் தலைவரே ஒப்புதல் செய்து அதனை நேரடியாக தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமத்திற்கு அளிக்க ஏதுவாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.
- பணியாளர்களின் உணவுக் கட்டணம் நாள் ஒன்றிற்கு, சென்னையில் பணிபுரிபவர்களுக்கு **80/–** ரூபாயிலிருந்து **100/–** ரூபாயாகவும் மற்றும் புறநகரில் பணிபுரிபவர்களுக்கு **55/–** ரூபாயிலிருந்து **75/–** ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. பின்னர், அதனை காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக, சென்னையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு

100/– ரூபாயிலிருந்து 200/– ரூபாயாகவும் மற்றும் புறநகரில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 75/– ரூபாயிலிருந்து 150/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக, உதவி மாவட்ட அலுவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடர்படி 180/– ரூபாயிலிருந்து 400/– ரூபாயாகவும் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி 210/– ரூபாயிலிருந்து 450/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- "உங்கள் சொந்த இல்லம்" என்ற தனிச் சிறப்பு வாய்ந்த திட்டத்தின் கீழ், வீடுகள் பெற காவல்துறை, சிறைத்துறைப் பணியாளர்களுடன் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் தகுதி உடையவர்களாக சேர்த்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- **28** கோடி ரூபாய் செலவில், தீயணைப்புப் பணியாளர்களுக்கு தீயில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் விதமாக **1980** ஜோடி பணியாளர் தற்காப்பு உடைகள் வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- **5.99** கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு, புதிய தலைமையக கட்டடம் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் இயந்திரகம்மியர் ஓட்டுநர் பதவிகளில் உள்ளவர்கள் பதவி உயர்வு பெறுவதில் இருந்த தேக்க நிலையினைக் களையும் வகையில், **2012–2013**–ஆம் ஆண்டில் **52.87** இலட்சம் ரூபாய் தொடர் செலவினத்தில் **165** இயந்திரகம்மியர் ஓட்டுநர் பதவிகள் நிலைய அலுவலர் (போக்குவரத்து) பதவியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

- தீயணைப்போர் பதவிக்கு புதியதாக 791 நபர்கள் பணி நியமனம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- பல்பொருள் அங்காடிகள் மூலம் குறைந்த விலையில் பொருட்களை பெறும் சலுகையினை நாட்டிலேயே முதன் முறையாக காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- மாவட்ட அலுவலர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்களுக்கான குழு காப்பீட்டுத் தொகை, இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.
- பணியாற்றும்போது உயிரிழக்கும் பணியாளர்களது குடும்பத்தினருக்கு குழு காப்பீடு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி உதவித் தொகை,

1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- நீலகிரி மாவட்டத்தின் பயன்பாட்டிற்கு என 92.12 லட்சம் ரூபாய் செலவில் உரிய மீட்பு உபகரணங்களுடனான 4 இழுவை ஊர்திகள் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- இரண்டு துணை இயக்குநர் பணியிடங்கள், இணை இயக்குநர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- 9.50 லட்சம் ரூபாய் செலவில் மூச்சுக் கருவிகளுக்கு பிராணவாயு நிரப்புவதற்கு தேவைப்படும் "மூச்சு காற்று நிரப்பும் கருவி" (Breathing Air-Compressor) வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- கோட்ட அலுவலர் என்ற பதவியின் பெயரினை, "மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்" என பெயர் மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- இத்துறையினை வலுப்படுத்தும் விதமாக நவீன தீயணைப்பு கருவிகள் மற்றும் ஊர்திகள் வழங்கும் வகையில், 10 தரம் உயர்த்தப்பட்ட நீர்தாங்கி வண்டிகளும், 52 விரைவு ஊர்திகளும், 52 அதிக அழுத்தப் பம்புகள் (விரைவு ஊர்திகளின் மேல் பொருத்தக் கூடியது) மற்றும் ‘‘வெட்டும் மற்றும் விரிக்கும்’’ திறன் ஒருங்கிணைந்த 38 கருவிகளும் மொத்தம் 9.45 கோடி ரூபாய் செலவினத்தில் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- அனைத்து தீயணைப்பு வீரர்களும், ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை உறுதி செய்யும் வகையில், புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 550 தீயணைப்போர்களுக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான பயிற்சி அளித்திட 21.29 லட்சம் ரூபாய் செலவினம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- சென்னை மாநகராட்சி விரிவாக்கப் பகுதியின் கீழ் வரும் துரைப்பாக்கம், வேளச்சேரி, மாதவரம்,

விருகம்பாக்கம் மற்றும் மதுரவாயல் ஆகிய 5 இடங்களில் மொத்தம் 3.70 கோடி ரூபாய் செலவில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ஊர்திகள் நல்ல நிலையில் பராமரித்தலை உறுதிபடுத்தும் வகையில், ஊர்திகளை பழுது நீக்கம் செய்வதற்கு செலவினம் ஒப்பளிப்பு செய்ய இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் / துணை இயக்குநர்களுக்கு ஏற்கனவே இருந்த ஒப்பளிப்பு அதிகார வரம்பு முறையே 20,000/– ரூபாயிலிருந்து 60,000/– ரூபாயாகவும் மற்றும் 10,000/– ரூபாயிலிருந்து 30,000/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல், தீயணைப்பு ஊர்திகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் தொட்டிக்கு பழுது நீக்கம் செய்தல் மற்றும் புதிதாக மாற்றம் செய்யும் பணிக்கு இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகார ஒப்பளிப்பு

வரம்பு **50,000/–**ரூபாயிலிருந்து **1,50,000/–** ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு நேர்வாக வானோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்திகளின் பழுது நீக்க பணிகளுக்கு இயக்குநரது ஒப்பளிப்பு அதிகார வரம்பு **20,000/–**ரூபாயிலிருந்து **1,50,000/–** ரூபாயாகவும் மற்றும் கால முறையாக மேற்காணும் வாகனத்திற்கு எண்ணெய் மாற்றம் செய்வதற்கான அதிகார வரம்பு **8,000/–** ரூபாயிலிருந்து **50,000/–** ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- கீரமங்கலம், அலங்காநல்லூர், அவிநாசி, அன்னூர், சென்னிமலை, செய்யூர் மற்றும் திருமருகல் ஆகிய 7 இடங்களில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களை மொத்தம் **6.30** கோடி ரூபாய் செலவில் அமைக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- 30 நீர்தாங்கி வண்டிகள் மற்றும் 6 சிறிய ரக நுரை தகர்வு ஊர்திகள் 9.27 கோடி ரூபாய் செலவினத்தில் வாங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- தேடல் மற்றும் மீட்புப் பணிக்கான கருவிகளாக, 140 கையடக்க, அதிக ஒளி வீசும் திறம்கொண்ட தேடும் விளக்குகள், 12 கதவு திறப்பான்கள், 64 கயிறு ஏணிகள், 64 இரப்பர் மின்காப்புக் கையுறைகள், 25 சிமெண்ட் கலவை உடைப்பான்கள், 8 இரப்பர் படகுகள், 100 உயிர் காப்பு மிதவைகள், 100 உயிர்காப்பு மிதவை மேலங்கிகள் மற்றும் 5 ஆழ்குழாய் கிணறு மீட்புக் கருவிகள் ஆகியவற்றை 64 லட்சம் ரூபாய் செலவினத்தில் வாங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- தேடல் மற்றும் மீட்புப் பணிக்கான கருவிகளாக, 15 மீட்டர் நீளமுள்ள, அதற்குரிய இணைப்பிகளுடன் கூடிய 2000 செயற்கை இழையால் ஆன நீர்விடுகுழாய்கள், 130 அடி நீளமுள்ள 1000 நீண்ட மணிலா கயிறுகள்,

2 அவசரகால மீட்பு ஊர்திகள், 40 மிதவை இரப்பர் படகுகள், 25 அதிக சக்தி கொண்ட இரம்பங்கள், 30 அதிவேக எளிதில் தூக்கிச் செல்லும் பம்புகள், 350 செறிவூட்டும் திறன் கொண்ட தேடும் விளக்குகள், 250 செறிவூட்டும் திறன் கொண்ட கையடக்க விளக்குகள், 20 நீட்டி மடக்கும் திறன் கொண்ட அவசரகால விளக்குகள் ஆகியவற்றை மொத்தம் 7.50 கோடி ரூபாய் செலவினத்தில் வாங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- குறிப்பிட்ட கால உழைப்பினை முடித்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள, எளிதில் தூக்கிச் செல்லும் பம்புகள் மற்றும் மிதவை பம்புகளை கழிவு செய்வதற்கான அதிகாரம் இயக்குநருக்கு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை நகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு, மேம்படுத்தப்பட்ட கம்பியில்லா மிகு உயர் அலைவரிசை தகவல் தொடர்பு

கருவிகளை **32** இலட்சம் ரூபாய் செலவினத்தில் வாங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- **5** மண்டல அலுவலகங்கள், **34** மாவட்ட அலுவலகங்கள், மாநிலப் பயிற்சி மையம், மாநிலப் பட்டறை மற்றும் தீக்கட்டுப்பாட்டு அறை ஆகியவற்றிற்கு இணையதள வசதி **10.03** லட்சம் ரூபாய் செலவினத்தில் ஏற்படுத்தித் தர ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- காங்கேயம், வெள்ளக்கோவில் மற்றும் சேத்துபட்டு ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கு **1.84** கோடி ரூபாய் செலவினத்தில் கட்டடம் கட்ட ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் வருடாந்திர பராமரிப்புப் பணியினை, பொதுப்பணித் துறையினர் மேற்கொள்வதற்கு பதிலாக, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தினர் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

- அரக்கோணம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் ஒரு நிலைய அலுவலர் மற்றும் 16 பணியாளர் குடியிருப்புகள், சென்னை மாவட்டத்தில், வண்ணாரப்பேட்டையில் 3 நிலைய அலுவலர் குடியிருப்புகள் மற்றும் தங்கசாலையில் 6 பணியாளர் குடியிருப்புகள் ரூபாய் 3.92 கோடி செலவினத்தில் கட்டித்தர ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை தலைமையகத்திற்கு பணிநிமித்தம் வருகைபுரியும் மாவட்ட அலுவலர்கள் அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள உயர் அலுவலர்கள் தங்குவதற்கு இத்துறைக்கென முதன்முறையாக ஒரு தங்கும் விடுதியும், சென்னையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர் மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ள உயர் அலுவலர்களுக்கு என இரண்டு குடியிருப்புகளும் 13.19 கோடி ரூபாயில் கட்டித்தர ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- தியாகராயநகர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு என சொந்தக் கட்டடம் கட்ட

ஏதுவாக, பாஷ்யம் சாலை மற்றும் ஜி.என். செட்டி சாலை சந்திப்பில் **4553** சதுர அடி நிலம் விலை ஏதும் இல்லாமல் ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- தீவிபத்து மற்றும் மீட்புப் பணி பணியாளர்களுக்கு பண வெகுமதி வழங்குவதற்கு இயக்குநர், இணை இயக்குநர் / துணை இயக்குநர் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கான அதிகார வரம்பு பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

| பதவி | குழுவிற்கு | தனிப்பட்ட நபருக்கு |
|---|---|---|
| இயக்குநர் | **1,000/—** ரூபாயிலிருந்து **10,000/—** ரூபாய் | **250/—** ரூபாயிலிருந்து **1,500/—** ரூபாய் |
| இணை இயக்குநர்/ துணை இயக்குநர் | **600/—** ரூபாயிலிருந்து **2,000/—** ரூபாய் | **150/—** ரூபாயிலிருந்து **500/—** ரூபாய் |
| மாவட்ட அலுவலர்கள் | **250/—** ரூபாயிலிருந்து **1000/—** ரூபாய் | **75/—** ரூபாயிலிருந்து **250/—** ரூபாய் |

- நிலைய அலுவலர் / நிலைய அலுவலர் (போக்குவரத்து) மற்றும் உதவி மாவட்ட

அலுவலர்களுக்கு, தீ விபத்துக்கள் / மீட்பு அழைப்புகளில் பணியாற்றும்போதும் மற்றும் படை திரட்டும் பணியில் ஈடுபடும்போதும், காவல்துறையில் உள்ள சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளருக்கு வழங்கப்படுவதுபோன்றே, சென்னையில் பணிபுரிபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு **200/–** ரூபாய் வீதமும் மற்றும் வேறு இடங்களில் பணிபுரிபவர்களுக்கு **150/–** ரூபாய் வீதமும் ஆக, மொத்தம் **43** இலட்சம் ரூபாய் ஆண்டு தொடர் செலவினத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சீருடை தையற் கட்டணத்தை, காவல்துறை பணியாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல் ஜோடி ஒன்றுக்கு **250/–** ரூபாயிலிருந்து **450/–** ரூபாயாக, மொத்தம் **27.49** இலட்சம் ரூபாய் ஆண்டு தொடர் செலவினமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- மோப்பநாய் படை பிரிவினைச் சேர்ந்த மோப்ப நாய்களுக்கான உணவு கட்டணமானது நாள் ஒன்றிற்கு 54/– ரூபாயிலிருந்து 100/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. மோப்ப நாய் படை பிரிவினைச் சேர்ந்த 6 மோப்ப நாய்களுக்கான உணவுக் கட்டணத்தினை, நாள் ஒன்றிற்கு 100/– ரூபாயிலிருந்து 200/– ரூபாயாகவும் மற்றும் மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தினை 250/– ரூபாயிலிருந்து 300/– ரூபாயாகவும் மேலும் உயர்த்தி மொத்தம் 2.23 லட்சம் ரூபாய் தொடர் செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி இந்த அரசு ஆணை வழங்கியுள்ளது.
- பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக, ஆண்டு தோறும் தீயணைப்புத் தொண்டு நாள் அன்று வழங்கப்பட்டுவரும், சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கத்தின் எண்ணிக்கை 3–லிருந்து 6–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

- மண்டல விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான மானியத் தொகையை 8,000/– ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாயாகவும் மற்றும் மாநில விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான மானியத் தொகையை 30,000/– ரூபாயிலிருந்து 3 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- 15 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் உள்ள நீர்தாங்கி வண்டிகளுக்கு மாற்றாக, 15 புதிய நீர்தாங்கி வண்டிகள் வழங்க 4.50 கோடி ரூபாய் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- முக்கிய தொழிற் நகரங்களுக்கு சிறிய நுரை கலவை தகர்வு ஊர்திகளை படிப்படியாக வழங்கும் திட்டத்தின் கீழ், தாம்பரம் (தென்சென்னை), தண்டையார்பேட்டை (வடசென்னை), ஓசூர் சிப்காட் (கிருஷ்ணகிரி) மற்றும் திருமங்கலம் (மதுரை) ஆகிய இடங்களுக்கு 4 சிறிய நுரை தகர்வு

ஊர்திகள் ரூபாய் 1.52 கோடி செலவினத்தில் வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- அனைத்து மண்டலங்களுக்கும் கம்பியில்லா தகவல் தொழில்நுட்ப வசதியை ஏற்படுத்தும் வகையில், வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய 4 மண்டல தலைமை இடங்களுக்கும் 90 லட்சம் ரூபாய் செலவில் 30 மிக உயர் அலை நிலைக் கருவிகள் (VHF Static Sets), 30 மிக உயர் அலை உடன் எடுத்துச் செல்லும் கருவிகள் (VHF Mobile Sets), 30 மிக உயர் அலை கையடக்கக் கருவிகள் (VHF Walkie Talkie Sets) மற்றும் 2 பிரதிபலிப்புக் கருவிகள் (Repeaters) வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் 95 லட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய தீயணைப்பு

மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம், காலவாக்கம் கிராமத்தில் ஒரு புதிய பயிற்சி கழகத்தினை அமைக்க அரசால் நிலக் கிரயமின்றி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 12.84 ஏக்கர் நிலத்தை பாதுகாக்கும் பொருட்டு 60 லட்சம் ரூபாய் செலவில் சுற்றுச் சுவர் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- உதவி மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்கென 10 ஜீப்புகள் வாங்குவதற்கு ரூபாய் 56 லட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- நிலைய அலுவலர்களின் பயன்பாட்டிற்கென 50 மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு ரூபாய் 30 லட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- தீயணைப்பு வீரர்களுக்கு 1000 தற்காப்பு உடைகள் 5 கோடி ரூபாய் செலவில் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, தங்க சாலையில், 50 பணியாளர்களுக்கு (திருமணமாகாதவர்கள்) ஒரு படைக் குடியிருப்பு ரூபாய் 1.13 கோடி செலவில் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேம நல நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் 12 லட்சம் ரூபாய் அரசு மானியம் 20 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக, 40 வயது முடிவுற்ற அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை, அரசு மருத்துவமனைகளில் கட்டணமின்றி முழு உடல் பரிசோதனை செய்துக் கொள்ளும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## XVII. நிறைவுரை

“மெட்ராஸ் தீயணைப்புப்படை” (Madras Fire Brigade) என்ற சிறிய குழுவாக சென்னை நகருக்கென துவக்கப்பட்ட தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது, தற்போது நாட்டிலுள்ள மிகச் சிறந்த தீயணைப்புத் துறைகளில் ஒன்றாக வளர்ச்சி அடைந்துள்ளது. இத்துறை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நன்கு சீரமைக்கப்பட்ட அமைப்பாக உள்ளது. மிகவும் சவாலான பேரிடர் நெருக்கடிகளை கையாள்வதில் முனைப்பான ஆற்றலுடன் திறமையாகவும் செயல்படுகிறது. எனது அரசின் வலிமையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதலால், இத்துறையானது தொழில்நுட்பத் திறன் சார்ந்த அனைத்து கோணங்களிலும் முழுமையான வளர்ச்சி அடைந்துள்ளது. இத்துறையானது, 104 மீட்டர் உயரம்


வரை வான் நோக்கி நீளும் ஏணி ஊர்திகளோடு, அனைத்து மண்டலங்களையும் உள்ளடக்கிய நவீன தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நவீன உபகரணங்களை கொண்டு வெற்றியோடு பொதுமக்களின் பாராட்டுதலுடன் அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற தொடர்ந்து செயலாற்றும்.

**ஜெ ஜெயலலிதா**
**முதலமைச்சர்**

# அட்டவணை – I

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

## நிருவாக அமைப்பு




குறிப்பு:– அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை அந்தந்தப் பதவிகளில் உள்ளோர் எண்ணிக்கையினைக் குறிப்பதாகும்.

<u>அட்டவணை – II</u>

## <u>மண்டலங்களின் கீழ் செயல்படும் நிலையங்கள் மற்றும் இதர அலகுகள்</u>

### வட மண்டலம்

| கோட்டம் | தீமீபநி | தீதகு | மற்றவை |
|---|---|---|---|
| 1. வட சென்னை | 9 | 1 | 1* |
| 2. தென் சென்னை | 11 | 1 | 1* |
| 3. மத்திய சென்னை | 9 | – | – |
| 4. சென்னை புறநகர் | 10 | – | – |
| 5. வட மண்டலம் | – | – | 2** |
| மொத்தம் | 39 | 2 | 4** |

### வடமேற்கு மண்டலம்

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. வேலூர் | 16 | 1 |
| 2. திருவண்ணாமலை | 12 | – |
| 3. காஞ்சிபுரம் | 11 | 1 |
| 4. திருவள்ளூர் | 9 | – |
| மொத்தம் | 48 | 2 |

### மத்திய மண்டலம்

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1.திருச்சிராப்பள்ளி | 8 | 1 |
| 2. புதுக்கோட்டை | 13 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | – |
| 4. நாகபட்டினம் | 12 | – |
| 5. கடலூர் | 15 | – |
| 6. விழுப்புரம் | 12 | – |
| 7. கரூர் | 4 | – |
| 8. பெரம்பலூர் | 6 | – |
| 9. திருவாரூர் | 11 | – |

### தென் மண்டலம்

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. மதுரை | 11 | – |
| 2. திருநெல்வேலி | 14 | – |
| 3. கன்னியாகுமரி | 7 | – |
| 4. தூத்துக்குடி | 9 | – |
| 5. விருதுநகர் | 8 | 1 |
| 6. இராமநாதபுரம் | 11 | – |
| 7. சிவகங்கை | 6 | – |
| 8. தேனி | 8 | – |
| மொக்கம் | 74 | 1 |

### மேற்கு மண்டலம்

| கோட்டம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 8 | 1 |
| 2. ஊட்டி | 3 | |
| கோத்தகிரி | 1@ | |
| 3. ஈரோடு | 10 | 1 |
| 4.திருப்பூர் | 8 | 1 |
| 5. சேலம் | 11 | 1 |
| 6. தருமபுரி | 4 | 1 |
| ஒகேனக்கல் | 1@ | |
| 7. கிருஷ்ணகிரி | 7 | – |
| 8. திண்டுக்கல் | 9 | 1 |
| 9. நாமக்கல் | 4 | – |

மொத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் எண்ணிக்கை 315 + 2 @

<u>பிற நிறுவனங்கள்</u>

| | |
|---|---|
| மாநில பயிற்சி மையம் | 1 |
| மாநிலப் பட்டறை | 1 |
| மீட்புப் பணி நிலையம் | 2@ |
| மோப்பநாய் படை | 1 |
| இசை மேளக்குழு | 1 |

குறிப்பு– தீமீபநி : தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்

தீதகு: தீத்தடுப்புக் குழு

மற்றவை:

*புகைப்படப் பிரிவு

**தீக்கட்டுப்பாட்டு அறை மற்றும் வான்தந்திப் பிரிவு

## அட்டவணை – III

## மாவட்ட வாரியான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்

| வ. எண் | மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 3 |
| 2 | சென்னை | 39 |
| 3 | கோயம்புத்தூர் | 8 |
| 4 | கடலூர் | 15 |
| 5 | திண்டுக்கல் | 9 |
| 6 | தருமபுரி (ஒகேனக்கலில் ஒரு மீட்புப்பணி நிலையம் உட்பட) | 5 |
| 7 | ஈரோடு | 10 |
| 8 | கரூர் | 3 |
| 9 | காஞ்சிபுரம் | 11 |
| 10 | கன்னியாகுமரி | 7 |
| 11 | கிருஷ்ணகிரி | 7 |
| 12 | மதுரை | 11 |
| 13 | நாகப்பட்டினம் | 12 |
| 14 | நாமக்கல் | 4 |

| | | |
|---|---|---|
| 15 | நீலகிரி (கோத்தகிரியில் ஒரு மீட்புப்பணி நிலையம் உட்பட) | 4 |
| 16 | புதுக்கோட்டை | 13 |
| 17 | பெரம்பலூர் | 2 |
| 18 | இராமநாதபுரம் | 11 |
| 19 | சேலம் | 11 |
| 20 | சிவகங்கை | 6 |
| 21 | தஞ்சாவூர் | 9 |
| 22 | தேனி | 8 |
| 23 | திருவண்ணாமலை | 12 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 10 |
| 25 | திருவாரூர் | 11 |
| 26 | திருவள்ளூர் | 9 |
| 27 | தூத்துக்குடி | 9 |
| 28 | திருப்பூர் | 8 |
| 29 | திருநெல்வேலி | 14 |
| 30 | வேலூர் | 16 |
| 31 | விழுப்புரம் | 12 |
| 32 | விருதுநகர் | 8 |
| | **மொத்தம்** | **317** |